

பாடம் - 4

பாரதியாரும் ஜீவாதாரம் சக்தியும்

ஜீவாதார சக்தி என்ற SAL ENERGY பற்றி விரிவாகவே பார்த்தோம். இருந்து நம்முள் பல கேள்விகள் எழுகின்றன.சாதாரண மனிதர்கள் ஆகிய நாம் இவர் அளவுக்குப் போக முடியுமா?

முடியும்! அது ஒவ்வொரு பிறவியிலும் நாம் மேற்கொள்ளும் ஆன்மீகப் பயிற்சி மூலம் ஏற்படும்.வெளியில் இருந்து பார்க்கும் நமக்கு அவர் பசியால் பஞ்சத்தால் சாதாரண மனிதன் போல் வருந்துவது "போல" இருக்கிறது. "ஏற்றுக் கொள்ளல்" என்ற மனோ பக்குவம் உடையவனுக்கு அத்துன்பமே இல்லை.இதைத் தான் நாம் உணர வேண்டும். இல்லை என்றால் என்றோ தற்கொலை செய்கொண்டிருக்கலாம். அல்லது தன் திறத்துக்கு ஏற்ற அரண்மனை போக வாழ்வில் தன்னை விற்றுக் கொண்டு சுகபோக வாழ்க்கை வாழலாம்.

அதற்காக அவர் மனைவியும் மக்களும் ஏன் கஷ்டப்பட வேண்டும்?
நல்ல கேள்வி! மனைவியும் மக்களும் இவரைப் போன்ற ஆன்மாவுடன் இணைந்து வர முன் ஜென்ம சங்கல்பம் வைத்தனர். அதனால் தான் அவரே சொல்வார், "இறைவன் இடத்தில் ப்ரார்த்தனை செய்யும் போது விவேகத்துடன் யோசித்து வரம் கேட்க வேண்டும்! வரம் வாங்கிய பின் வருந்தக் கூடாது!"

அவரது மனைவியும், மக்களும், உடன் சேர்ந்தோரும், வாழ்ந்தோரும் அவரால் மாற்றங்களுக்கு ஆளாயினர். இந்த மாற்றத்துக்கு எனவே நாம் சேர்ந்து வருகிறோம்.

ஆனால் மனிதன் தன்னை மட்டும் தான் மாற்றிக் கொள்ள முடியும்.பிறரை மாற்றுதலுக்கு ஊக்குவிக்கவும் உந்தவும் முடியுமே ஒழிய மாற்ற முடியாது. அவனவன் வாழ்க்கை அவனவன் தாய் வீடு திரும்பவே!

நாம் அப்போது அன்றாடத் தேவைகளைத் தேடுவது தவறா?
இல்லவே இல்லை! நியாமாக நேர்மையாக உண்மையான உழைப்பில் அவனவன் தன் குடும்பத்தைக் காக்க பொருள் ஈட்டவே வேண்டும். அதற்கு துணை செய்ய

வேதங்கள் பல ப்ரார்த்தனைகளை, கர்மங்களை, சடங்குகளைக் கூறுகின்றன.ஆனால் அனைவரும் தன் முக்தியை நெருங்கும் சமயம் பூரண சரணாகதியில் இவரைப் போல் எல்லாம் மாறுவோம்.மதுரைக்குப் போகும் வழியில் வைகைப் பாலத்தைக் கடந்து தான் ஆக வேண்டும். அது எல்லாருக்கும் உண்டான கதி! அது போலத் தான்!அப்படி பாரதியார் வாழ்ந்ததால் தான் அவருடைய மகள்களுக்குப் பிறர் மூலம் நல்ல வாழ்க்கை உண்டானது.ஆனால் அவர் அதைப் பற்றி எல்லாம் எண்ணவே இல்லை.ஆனால் ஆணவத்துக்கும் ஆன்மீக பலத்துக்கும் இடையில் அவருள் போர் இருந்தது. அதில் அவர் வென்றார்.

ஒரு கடைக்குப் போகிறோம். அங்கே ஒரு பொருளைப் பார்க்கிறோம். அது மிகவும் தேவையானது. ஆனால் வாங்கும் முடிவை மாற்றிக் கொள்கிறோம். காரணம் அப்பொருளைக் காட்டிலும் வேறு ஒரு தேவைக்கு செலவு இருக்கிறது. அதே போல் தான் SAL ENERGY செலவும். இப்படிச் செய்வது தவறு-சரி என்று எதுவும் இல்லை.

தமக்கென வாழாப் பெருந்தகையோர் என்போர் இக்கொள்கையைக் கடைப்பிடிப்போரே!

**ஆனால் பல கட்டங்களில் பாரதியார் பல முயற்சிகள் செய்கிறாரே?**
உண்மை! **உதாரணம்:** தன் கவிதைகளை மிக உயர்ந்த விதத்தில் பதிப்பித்து வெளியிடப் பலர் இடத்தில் பொருள் உதவி கேட்கிறார். அது கிடைக்காத போது அதற்காக அவர் துளியும் கவலை கொள்ளவில்லை.மேலும் இவரைப் போன்ற மஹான்கள் தங்கள் வாழ்க்கையில் தாங்கள் மேற்கொள்ளும் பல சேவைகளில் மக்களை ஈடுபடுத்த முற்படுவர். அதன் மூலம் மக்களின் வினை களையும். இதைப் புரிந்து கொள்ளுதல் அவசியம். ஒரு மஹான் தன் மடத்து அன்னதானத்துக்கு உன்னிடம் பத்து மூட்டை அரிசி கேட்கிறார். அப்படி என்றால் உன் வினையை அதன் மூலம் களைய அவர் உதவுகிறார். அரிசி தானம் செய்த நீ தற்பெருமை பேசுவது வீண்!

எட்டயபுர ராஜாவிடம் அவர் சென்று கவி பாடிப் பொருள் வேண்டியதன் உட்பொருளும் அதுவே! ஆனால் அதை ராஜா உணரவில்லை.அவருடன் வாழ்ந்த பலர் அவரது சத்ய ஸ்வரூபம் உணர்ந்து அவருக்கு சேவைகள் செய்தனர்.**Associates of Bharathiyar** கட்டுரைகளில் பல அன்பர்கள் இதற்குச் சான்றாக அமைவதைப் படித்திடுக.

**இத்தனை பெருமை பேசும் நீர் அவர் போதைப் பொருட்கள் பயன்படுத்தியதற்கு**

**என்ன விளக்கம் தருவீர்?**

கேட்பட வேண்டிய வினா!

போதையை மனிதன் தன் உடலை, உணர்வை மறந்து விட உபயோகிக்கிறான். தாந்த்ரீக பூஜைகளில் போதை வஸ்துக்கள் பயன்பட்டன. அவற்றின் மூலம் ”என் உடல், என் மனம்” என்ற எல்லைகளைக் கடந்து செல்ல உபாசகர் முயற்சிப்பர். ஆனால் இதனால் வினை உண்டு என அவர்களுக்குத் தெரியும். **ஸ்ரீராமக்ருஷ்ண பரமஹம்ஸர் தினமும் ஹுக்கா [புகையிலை கலந்த கஞ்சா] பயன்படுத்துவார்**. அதன் வினை அவருக்கு ஏற்பட்ட தொண்டைப் புற்றுநோய். அதை அவர் மனமார ஏற்றார். அதனால் தான் அவர் இறைவனிடம் அதை மாற்றும் படி வேண்டவில்லை. இறைவனைத் தன்னுள் உணர அவர் போதையைக் கையாண்டது உண்மை.அதன் வினை வ்யாதி! அதையும் அவர் ஏற்றார்.

பாரதியாரும் அதே போல் தான் போதையினால் ஏற்பட்ட கல்லீரல் ப்ரச்சனைக்கு மருந்தே உட்கொள்ளவில்லையே! தான் எண்ணிய தெய்வீகத் தன்னுள் உணர அப்போதை அவருக்கு வேண்டியதாக இருந்தது. ஆனால் அதனால் வரும் வினை வேண்டாம் என்றால் அது எப்படி? இன்று மக்கள் எதையும் இழக்கத் தயாராக இல்லை. ஒன்று வேண்டும் என்றால் ஒன்றை இழக்க வேண்டும்! இது அறிவியல்!

**வினையின் தன்மையை உணர்க!**

எது செய்தாலும் அதில் வினைப்பயன் உண்டு. அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் இருப்பவன் எதையும் செய்கிறான்.இதுவே வாழ்க்கை நியதி! எனவே இது தான் நல்லது - இது தான் கெட்டது என்பது இல்லை. வினையின் தன்மை தான் முக்கியம்!

போதை சக்தியை தெய்வீக சக்தியாக energy transfer செய்த பாரதியார் அதன் மூலம் பெற்ற கல்லீரல் வ்யாதி என்ற வினையை ஏற்றுக் கொள்கிறார். தான் தேடிய இறைமையை உணர்ந்து விட்ட திருப்தியில் 38 வயது முடியும் முன் மரணத்தை வரவழைத்து ஏற்றார்.அதனால் தான் இறக்கும் சில நேரம் முன் அவர் மகள் தன் தந்தை நலம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் மருந்து தருகிறார். பாரதியார் அதை வாங்கிக் குடித்து விட்டு சொல்கிறார், ”**பாப்பா! நீ தந்தது கஞ்சி, மருந்து இல்லை!**” இருட்டில் அப்பெண்ணுக்குக் குப்பி - glass cup மாறி விட்டது.

ஓம் சக்தி!

மதராஸ், செப்டம்பர் - 23, 2012